மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ தலைமை!

# காஞ்சிபுரத்தில் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜன.23 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை ( 25.1.2025- சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, காஞ்சிபுரம் காமராஜர் சாலை, பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

2 வது பகுதிச் செயலாளர் மண்டலக்குழுத் தலைவர் எஸ்.சந்துரு, 3 வது பகுதிச்செயலாளர் அ.தசரதன், 4 வது பகுதிச் செயலாளர் சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், தெற்கு ஒன்றியச் செயலாளர் க.குமணன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மு.குணசேகரன், துணை அமைப்பாளர்கள் தி.ராம்பிரசாத், ஏ.வி. சுரேஷ் குமார், சரளா தனசேகரன், எஸ்.தமிழ்ச்செல்வன், எஸ்.சரண்ராஜ் ஆயோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டு பேசுகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமியுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்டு கே.ஆறுமுகம், எம்.எஸ்.சுகுமார், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், பெ.சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், ப.அப்துல் மாலிக், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச் செல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், ஆ.சுப்பிர மணியன், அ.யுவராஜ், நாத்திகம் நாகராஜன், கே.ஏ. இளங்கோவன், இ.அசோகன், வ. மலர்மன்னன், ஏ.செல்வி, டி.ஜெய்கணேஷ், டி.வெங்கட்ராமன், ஏ.சசிகுமார், சி. இராதாகிருஷ்ணன், பி.எஸ்.ரமேஷ், மலர்க்கொடிகுமார், ஆர்.கே. தேவேந்திரன், நித்யாகுமார், சசிகலா கணேஷ்,

சாந்தி சீனிவாசன், செவிலிமேடு எஸ்.மோகன், ராஜலட்சுமி குஜராஜ், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், அ.பால முருகன், ம.அருள்முருகன், ஆ.சதீஷ் என்கிற சரவணன், எம்.தேவராஜ், சி. எம்.பிரபு, எம்.வி.இளம்பரிதி, எஸ்.அரவிந்த்குமார், ஜெ.தேவிகா, ரா.விஜயலட்சுமி, பி.விஜயா, மல்லிகா ராமகிருஷ்ணன், ஆர். கே. தம்பிதுரை, எஸ்.துரைமுருகன், ஏ.அர்ஜூன், இ.எஸ்.கண்ணன், எம்.பிரியங்கா, சாட்சி சண்முகசுந்தரம், உ.ரா.ராஜேந்திரன், பா.சுந்தர், தினேஷ்பாபு, எஸ்.தாஸ், எம்.மகாவீர் சந்த், மா.வெங்கடேசன், டாக்டர்அன்புச்செழியன், டாக்டர் எஸ்.ஓவியக்கண்ணன், பி.எம்.நீலகண்டன், எஸ்.டில்லிபாபு, இ.ஜாபர், ஏ.சரவணன், டி.ஸ்ரீதர், ஆர்.வரதன், சி.எஸ்.விஜி, எல்.புவனேஷ்வரி, ஜெ. சூரியா, ஜி.குமரேசன், ரா.வினோத்குமார், பி.எஸ்.குடியரசு, பா.தனலட்சுமி, எம்.மகாதேவன், ஏ.வரதராஜன்,

பா.கௌரிசங்கரன், பி.சிவக்குமார், வி.பகவான், எஸ்.எழில்குமார், கோ.எல்லப்பன், வி. கோவிந்தராஜ், கே.சிவக்குமார், ஜெ.நித்யா, வ.ராமமூர்த்தி, சீ.ஸ்ரீதர், ஆர். செந்தில்குமார், ஆர்.வேல்முருகன், த.ரகு, ஆ.மோகனவேல், ச.விமல்தாஸ், எஸ்.சுமித்ரா, கே.செல்வம், கே.ராதாகிருஷ்ணன், சி.தங்கபாண்டியன், எம். எஸ்.பி.பாண்டியன், ஆ. இப்ராகிம்ஷெரீப், என். சங்கர்,

வ.அய்யாவு, கே.கிரி என்கிற கிருபாகரன், கே. வடமலை, எ.சரஸ்வதி, தேவபிரகாஷ், கே.அருணாசலம், சன்.கனகசபை, சி.சௌந்தர்ராஜன், என். லட்சுமணன், எம்.எஸ். பாலன், எஸ்.பழனிவேல், எஸ்.மாரிமுத்து, ஆர். இளஞ்செழியன், எஸ். வி.ரமேஷ், மகாலட்சுமிராஜசேகர், அ.வேலுசாமி, எஸ்.எஸ்.ஆர். சசிகுமார், பி.என்.ரவி, நா.கருணாகரன், வி.பழனி, வ.வெங்கட்ராமன், டி.கவிதா டில்லிபாபு, எம்.சங்கர், கே. ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்.திருஞான சம்பந்தன், த.கன்னியப்பன், டி.எல்.தயாளன், ந.வீரராகவன், முனியம்மன், இராஜகோபால், கோ.கமலக் கண்ணன்,

ஏ.கே. பரசுராமன், தொ.தட்சிணா மூர்த்தி, வே.திருநாவுக்கரசு உள்பட காஞ்சிபுரம் மாநகர வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் குழு உறுப்பினர்கள், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியக் குழு உறுப்பினர்கள் காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கழக முன்னணியினர் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். 1 வது பகுதிச் செயலாளர் கே.திலகர் நன்றி கூறுகிறார்.

# தமிழ் மொழி பல வழிகளில் புது வடிவில் உருவெடுத்திட வேண்டும்!

## காரைக்குடியில் முதல்வர் முன்னிலையில் ப. சிதம்பரம் எம்.பி.பேச்சு!

சிவகங்கை, ஜன. 24 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. குடும்பத்தினரால் ரூபாய் 12 கோடியில் வளர் தமிழ் நூலகம் கட்டப்பட்டுள்ளது.

அந்த நூலகத்தை தமிழ்நாடு முதல்வர் மு .க . ஸ்டாலின் அவர்கள். திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப. சிதம்பரம் நூலகத்திற்கான நோக்கம் குறித்து பேசியதாவது .இந்த விழா வழக்கமான விழாவாக கொண்டாடப்படவில்லை. தமிழ் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக இந்த விழா நடைபெறுவதாக கருதுகிறேன். இளம் வயதில் என்னுடைய தாயார் லட்சுமி என்னை தமிழ் ஆங்கிலம் படிக்குமாறு வற்புறுத்தி வந்தார் .

இதனால் நான் தமிழ் மொழி படித்ததால் தமிழில் அதிக ஆர்வம் கொண்டவனானேன். நான் தமிழ் மொழியை அதிகமாக பேசி நேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் என் தாயார். தமிழ் மொழி மீது இன்றுவரை பற்று ஏற்பட காரணம் முனைவர் ராஜேந்திரன், பதிப்பாளர் கவிதா சொக்கலிங்கம் ஆகியோருக்கு நான் இன்று நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் .

நாம் அனைவரும் தமிழ் வாழ வேண்டும் வளர வேண்டும் என்று விரும்புகிறோம். நினைத்து வருகிறோம் அதை 9 கோடி தமிழர்களும் நினைத்திட வேண்டும். தமிழ் என்றும் ஆட்சி கோலவேண்டும். எங்கும் என்றும் ஆட்சி



மொழியாக திகழ வேண்டும்.

இசை தமிழ், நாடகத்தமிழ், மட்டும் போதாது. நாடக தமிழ், சட்டம் தமிழ், மருத்துவம் தமிழ் போன்று டிஜிட்டல் தமிழ், ரோபோடிக்ஸ் போன்று தமிழ் பல்வேறு பரிமாணங்களில் புதிய வடிவமைப்பினை பெற வேண்டும். இங்கு அமைந்துள்ள இந்த நூலகம் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன் . சிறுகதை , கவிதை வரலாறு மற்றும் போன்றவற்றிற்கு இந்த நூலகம் நாற்றங்காலாக அமைய வேண்டும் .சிவகங்கை மாவட்டம் தமிழ் வளர்த்த பூமியாகும். வள்ளல் அழகப்ப செட்டியார் எங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரமாகும் .

எங்களுக்கு அறிவுப்பசி அதிகம். யானைப்பசி போன்றது. அதற்கு இங்கு உள்ளவர் கள் உதவவேண்டும். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்த நூலகத்திற்கு உதவிடவேண்டும். எங்களது குடும்பத்தினருக்கு இங்கு வளர் தமிழ் நூலகம் ஏற்படுத்த தந்ததற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. பேசினார்.

இரும்பின் பயன்பாடு குறித்து வரலாற்று சிறப்புமிக்க ஆய்வு முடிவுகளை வெளியிட்டு

# உலகிற்கு உணர்த்திய முதலமைச்சருக்கு ஆயிரம் நன்றிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வலைதளப் பதிவு!

சென்னை, ஜன. 24 -

சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதியின் நேற்றைய சமூக வலைதளப் பதிவு வருமாறு:

5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ்நிலத்தில் அறிமுகம் ஆகிவிட்டது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆய்வு முடிவுகளை இன்று



முதலமைச்சர் அவர்கள்

உறுதி செய்துள்ளார்.

தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டு வரலாற்றையும் மறைக்க துடித்து பொய் வரலாறு புனைந்து வந்தோரின் பொய்களை எல்லாம் அறிவியல் ஆய்வு மூலம் சுக்கு நூறாக்கி விட்டார் நமது முதலமைச்சர் அவர்கள்.

இந்திய வரலாறு தெற்கில் தமிழ் நிலத்தில் இருந்தே இனி எழுதப்படும் அதை உலகிற்கு உணர்த்திய முதலமைச்சர் அவர்களுக்கு ஆயிரம் நன்றிகள்.

இவ்வாறு அமைச்சர் ரகுபதி தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 30-01-2025 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் - செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் - துணைச் செயலாளர்கள் சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பொருள்: 1. பிப்.18 அன்று திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா,

2. கழக ஆக்கப்பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.1.2025

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. தலைமையில்

# 92வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

## நொளம்பூர் வே.ராஜன் - எம்.எம். ஜெயரத்தினம் பங்கேற்பு!

சென்னை, ஜன.24-

கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணையை ஏற்று சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் வரவேற்புரை ஆற்றும் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு நமது கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சியுரை ஆற்றும் கூட்டம் குறித்து 92வது வட்டத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையிலும், பகுதி கழக துணை செயலாளர் எம்.ஏ.செந்தில் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி எம். சி.எழில்அரசு, வட்ட அவைத் தலைவர் எம்.எஸ். சந்தானம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நமது 92 வது வட்ட கழக சார்பில் பெரும் திரளாக கலந்து கொண்டும் சிறப்பான வரவேற்பு அளிக்கவும் வட்ட கழக ஆலோசனை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர், பகுதி அமைப்புக்கள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

டி.புகழேந்தி நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



**இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. மோகனதாசன்

**சனவரி 24 (2012)**



**கழகம் ஆரம்பித்த காலத்தில், சீர்காழி வட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, தொடர்ந்து கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் முதல் செயலாளராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைச் செயலாளராகவும், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவராகவும் – துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**பூம்புகார் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சீர்காழி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**“பல தியாகங்களைச் செய்து, பலமுறை சிறை சென்று, எந்தச் சூழ்நிலையிலும் என்பால் கொண்ட அன்பை மறவாமல் என்னோடு பாசத்தோடு பழகி வருகின்ற தம்பி” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



**கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.**

**வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**